புரட்சிப்
# பெரியார் முழக்கம்
திராவிடர் விடுதலைக் கழக வார ஏடு
www.dvkperiyar.com

ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன் திருவள்ளுவர் ஆண்டு 2049 ஆகஸ்டு 09, 2018 புரட்சி 17 முழக்கம் 30 விலை: ரூ.3.00

# விடை பெற்றார்!



1924 -2018

கலைஞரால் வளர்க்கப்பட்ட திராவிட முன்னேற்றக் கழகம் – திராவிட இயக்கத்தின் கொள்கைக் கோட்டையாகட்டும்!

அதுவே கலைஞருக்கு செலுத்தும் நிலைத்த அஞ்சலி!

***திராவிடர் விடுதலைக் கழகத்தின்***
***வீரவணக்கம்!***

# பல்கலைக் கழக மான்யக் குழுவைக் கலைப்பது ஏன்?

# ‘தகுதி’ என்ற பெயரில் சமூகநீதி புறக்கணிப்பு

முன்னாள் குடியரசுத் தலைவர் சர்வபள்ளி ராதா கிருஷ்ணன். அவர் தலைமையில் 1948இல் உருவாக்கப்பட்டது பல்கலைக்கழகக் கல்வி வாரியம். அனைவருக்கும் தரமான உயர் கல்வி என்ற இலக்கோடு 1956இல் பல்கலைக்கழக மானியக் குழுவாக (யு.ஜி.சி.) அது சட்டபூர்வமாக நிலைபெற்றது. மாணவர் கல்வி உதவித்தொகைத் திட்டத்தை முன்வைத்த சி.டி.தேஷ்முக், மகளிர் பல்கலைக்கழகங்களை நிறுவத் திட்டங்கள் தீட்டிய மாதுரிஷா ஆகிய இருவரும் ஒரு ரூபாய் ஊதியத்துக்கு யூ.ஜி.சி.யின் தலைவர்களாகப் பணியாற்றியவர்கள்.

இப்படிக் கல்வியாளர்களாலும் தொலைநோக்குப் பார்வை கொண்டவர்களாலும் கட்டமைக்கப்பட்ட ஒரு கல்விக் கழகம் யு.ஜி.சி. ஆனால், தற்போது அது கலைக்கப்பட விருக்கிறது.

பல்கலைக்கழக மானியக் குழுவைக் கலைத்துவிட்டு இந்திய உயர் கல்வி ஆணையம் (Higher Education Commission of India - HEI) என்ற புதிய கல்விக் கழகம் வரப்போகிறது. அப்படியானால் பல்கலைக்கழகங்களுக்கும் கல்லூரி களுக்கும் தொடர்பில்லாதவர்கள் இனி அனைத்து உயர்கல்வி நிறுவனங்களின் திட்டத்தை மதிப்பிட்டு மானியம் வழங்க உரிமைகொண்டவராவர்.

### கோரிக்கையின் தொகுப்பு

இந்திய உயர்கல்வியின் எதிர்காலத்தைக் கேள்விக் குள்ளாக்கவிருக்கும் இந்த நடவடிக்கையின் முன்னோட்டம் ஜூன் 28 அன்று மனிதவள மேம்பாட்டு துறை அமைச்சகத்தின் இணையதளத்தில் அதிலும் ஆங்கில மொழியில் மட்டும் வெளியிடப்பட்டது.

கருத்துகேட்கும் முன்வரைவாகத்தான் அது முன்வைக்கப் பட்டாலும் குறுகிய கால அவகாசம் மட்டுமே கருத்து கேட்புக்குத் தரப்பட்டது. அதிலும் ‘மசோதா’ என்பதற்குப் பதிலாக ‘சட்டம்’ என்ற பதத்துடன் ‘இந்திய உயர்கல்வி ஆணையச் சட்டம் 2018’ முன்வரைவாக அறிவிக்கப்பட்டது.

இந்நிலையில் இந்த முன்வரைவை ஆழமாகப் பரிசீலித்த தமிழகக் கல்வியாளர்கள், கல்விச் செயற்பாட்டாளர்கள் இம்மசோதாவைத் திரும்பப் பெற வலியுறுத்திக் கடிதங்கள், கட்டுரைகள், தீர்மானங்கள் எழுதிவருகிறார்கள்.

தனிநபர்களும் அமைப்புகளும் இவ்வாறு எழுதியவற்றை ‘கல்வி: சந்தைக்கான சரக்கல்ல’ என்ற புத்தகமாகத் தொகுத்துத் தற்போது பாரதி புத்தகாலயம் வெளியிட்டுள்ளது. முனைவர் ச.சீ. ராஜகோபாலன், வெங்கடேஷ் ஆத்ரேயா உள்ளிட்ட வர்கள் எழுதிய கடிதங்கள், தீர்மானங்கள், கட்டுரைகளைக் (தமிழ் 9, ஆங்கிலம் - 4) கல்விச் செயற்பாட்டாளர் பிரின்ஸ் கஜேந்திரபாபு தொகுத்து இருக்கிறார்.

‘பொதுப் பள்ளிக்கான மாநில மேடை தமிழ்நாடு’ சார்பில் ஜூலை 5 அன்று இந்திய அரசின் மனிதவள மேம்பாடுத் துறை அமைச்சருக்கு பிரின்ஸ் கஜேந்திர பாபு எழுதிய கடிதத்தோடு புத்தகம் தொடங்குகிறது.

தொடக்கப் பள்ளிக்கான சமமான வாய்ப்புகள்கூட இல்லாத பல கிராமங்கள் இன்னும் இந்தியாவில் இருக்கின்றன. இப்படி இருக்கும்போது ‘தகுதி மட்டுமே’ என்ற கருத்தாக்கத்தைத் தூக்கிப்பிடித்துக்கொண்டு பாகுபாடுகளை மேலும் ஆழமாக வேரூன்றும் முயற்சியே இந்திய உயர்கல்வி ஆணையச் சட்டம் 2018 என்று விளக்க முயல்கிறது இந்தக் கடிதம்.

குறிப்பாக, ஒரு பல்கலைக் கழகத்தை உருவாக்குதல், முறைப்படுத்துதல், மூடுதல் உள்ளிட்ட அதிகாரம் மாநில அரசுக்கு மட்டுமே உரித்தானது என்ற சட்டத்துக்கு இந்த முன்வரைவின் உள்ளடக்கம் எதிராக உள்ளது. இதனால் பல்வேறு பல்கலைக்கழகங்களை உருவாக்கிய இந்தியாவின் அனைத்து மாநிலங்களின் சட்ட உரிமை பறிபோகும்.

அதுமட்டுமின்றி உலக வர்த்தக அமைப்பின் சேவையில் ஒரு பகுதியான ‘காட்’ ஒப்பந்தத்தின் உள்ளடக்கத்தையும் இந்த முன்வரைவுச் சட்டத்தின் உள்ளடக்கத்தையும் ஒப்பிட்டுப் படிக்கும்போது உயர்கல்வியை முழுமையாகச் சந்தையிடம் ஒப்படைக்கும் நடவடிக்கைதான் இந்தச் சட்டம் என்பது தெரியவருகிறது. இதுபோன்ற விமர்சனப் புள்ளிகளை முன்வைத்து யு.ஜி.சி.-யை வலுப்படுத்தக் கோரிக்கை விடுத்து முடிவடைகிறது இந்தக் கடிதம்.

### வீழ்ச்சிக்கு யார் பொறுப்பு?

இந்தப் புத்தகத்தில் இடம்பெற்றுள்ள ‘யு.ஜி.சி. பழுதுபட்டதா? பழுதுபடுத்தப்பட்டதா?’ என்ற கட்டுரை, பல்கலைக்கழக மானியக் குழுவை உள்ளும் புறமுமாகப் புரிந்துகொள்ள உதவுகிறது. யு.ஜி.சி.யின் தலையாய கடமைகளை விளக்குவதன் மூலமாக அதன் அவசியத்தையும் பங்களிப்பையும் வாசகர்களுக்கு உணர்த்துகிறார் கல்வியாளர் இராஜகோபாலன்.

புதிய பல்கலைக்கழகங்கள், கல்லூரிகள் அமைத்தல், புதிய பாடங்களைத் தொடங்க அனுமதி அளித்தல், மானியங்கள் வழங்குதல் உள்ளிட்ட உரிமைகளும் கடமைகளும் கொண்டது யு.ஜி.சி. ஆசிரியர் ஊதியத்தை நிர்ணயித்தல், ஆசிரியர்களின் ஆய்வுத் திறனை ஊக்குவிக்க எம்.ஃபில்., பி.எச்டி. படிக்கப் படிப்புத்தொகை, ஊதியத்துடன் பி.எச்டி. படிக்க விடுப்பு போன்ற திட்டங்களையும் மாணவர்களுக்குக் கல்வி உதவித்தொகை வழங்குதலையும் சிறப்பாக அறிமுகப்படுத்திக் கடந்த 60 ஆண்டுகாலமாக நடைமுறைப்படுத்திவருகிறது யு.ஜி.சி.

இதன் செயல்பாட்டில் தொய்வு ஏற்படக் காரணம் 1990-களில் இந்திய அரசுகள் வரிந்துகொண்ட தாராளமய, தனியார்மயக் கொள்கைகள்தாம். உலகமயமாக்கலின் தாக்கத்தால் கல்வி இனி, சேவையாகக் கருதத் தேவை இல்லை என்ற நிலைப்பாடு எடுக்கப்பட்டதால் புற்றீசல் போலத் சுயநிதிப் பல்கலைக்கழகங்களும் கல்லூரிகளும் முளைத்தன. இப்படியாக, இந்திய உயர்கல்வி வீழ்ச்சி அடைந்தது. அதற்கு யு.ஜி.சி. பொறுப்பல்ல என்று அறுதியிட்டுக் கூறுகிறார் கல்வியாளர் ராஜகோபாலன்.

### வெறும் 25% கல்வியாளர்கள்

யு.ஜி.சி.யின் முக்கியத்துவத்தைத் தெரிந்துகொள்ளும் அதேவேளையில் திட்டமிடப்பட்டிருக்கும் உயர் கல்வி ஆணையத்தில் தென்படும் சிக்கல்களும் இந்தப் புத்தகத்தில் இடம்பெற்றுள்ள அனேகக் கட்டுரைகளில் விவாதிக்கப்பட் டிருக்கின்றன. உயர்கல்வியின் எதிர்காலத்தை அச்சுறுத்தும் பல திட்டங்கள் சுட்டிக் காட்டப்பட்டுள்ளன.

யு.ஜி.சி.யைப் பொறுத்தவரை அந்த அமைப்பில் குறைந்தபட்சம் 50 சதவீதம் கல்வியாளர்கள் இருக்க வேண்டும் என்பது விதி. ஆனால், புதிய உயர்கல்வி ஆணையத்தில் 25 சதவீதம் மட்டுமே கல்வியாளர்கள் இருக்க வேண்டும் என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. அதிலும் புதிய ஆணையத்துக்குத் தலைவர், துணைத் தலைவர், உறுப்பினர்களை இனிக் கல்வியாளர்கள் தேர்ந்தெடுக்க முடியாது. மத்திய அரசின் உயர்கல்வித் துறைச் செயலாளர் தலைமையிலான 3 பேர் கொண்ட குழு தேர்வுசெய்யும்.

இதுக்கு ஒரு படி மேலே போய் வெளிநாடுவாழ் இந்தியர்களும் இதில் இடம்பெறுவார்களாம். யு.ஜி.சி.யின் உயிர்நாடி பல்கலைக்கழகங்களுக்கும் கல்லூரிகளுக்கும் கல்வியாளர்கள் மானியம் வழங்குதல். அந்த அதிகாரம் கல்வியாளர்களிடம் இருந்து பறிக்கப்பட்டு அரசு அதிகாரிகளிடம் இனி வழங்கப்படும்.

ஆகையால், பேராசிரியர்கள் முதல் துணைவேந்தர்களின் நியமனம்வரை, மாணவர்கள் செலுத்த வேண்டிய கல்விக் கட்டணம் உள்ளிட்ட அத்தனையும் இனிச் சொற்பமான எண்ணிக்கையில் கல்வியாளர்களையும் பெரும்பான்மையாக அரசு அதிகாரிகளையும் கொண்ட குழு தீர்மானிக்கும்.

சமூகப் பாகுபாடும் பொருளாதார ஏற்றத்தாழ்வும் நீடிக்கும் சமூகத்தில் யு.ஜி.சி. போன்ற ஜனநாயக அமைப்பைத் தக்கவைத்துக்கொள்வதன் மூலமாகத்தான் சமூகத்திலும் கல்வியிலும் பின்தங்கி உள்ள மக்கள் உயர் கல்வி பெற முடியும் என்பதை உரக்கச் சொல்கிறது இந்தப் புத்தகம்.

## வெட்கம்; அவலம்; தமிழகத்தின் ஜாதி வெறிக் கிராமங்கள்!

திருப்பூர் அருகே திருமலை கவுண்டன்பாளையம் அரசு உயர்நிலைப் பள்ளியில் சமையலராக நியமிக்கப்பட்ட அருந்ததிய சமூகத்தைச் சார்ந்த பாப்பாள், உள்ளூர் ஜாதி வெறியர்கள் எதிர்ப்பால் அதிகாரிகளால் இடமாற்றம் செய்யப்பட்டார். இதற்கு கடும் எதிர்ப்பு - ஜாதி எதிர்ப்பு இயக்கங்களிடமிருந்து வந்தன. பிறகு மீண்டும் பாப்பாளின் சொந்த ஊரான திருமலைக் கவுண்டன் பாளையத்துக்கே மாற்றப்பட்டார். இப்போது ஜாதி வெறியர்கள் பாப்பாள் குடும்பத்தை அச்சுறுத்தி வருவதாக பாப்பாள் கணவர் பழனிச்சாமி, போலீஸ் பாதுகாப்பு கேட்டு மாவட்ட ஆட்சி நிர்வாகத்திடம் மனு கொடுத்துள்ளார். பாப்பாள் நியமனத்துக்குப் பிறகு சில ஜாதி வெறியர்கள் தங்கள் வீட்டுப் பிள்ளைகளை மதிய உணவை பள்ளியில் சாப்பிடக் கூடாது என்று கூறி, வீட்டிலிருந்தே உணவு தயாரித்துக் கொடுத்து பள்ளிக்கு அனுப்புகிறார்களாம்.

இதே போன்று, திருச்சி புத்தூரிலிருந்து ஒரு தலித் அர்ச்சகர் சந்திக்கும் ஜாதிக் கொடுமைகள் குறித்து ஒரு செய்தி வந்துள்ளது.

தமிழ்நாடு அரசு நடத்திய அர்ச்சகர் பயிற்சிப் பள்ளியில் படித்த கே.சிவசங்கரன் (34) திருச்சி புத்தூரில் உள்ள அம்மன் கோயிலில் அர்ச்சகராக இந்து அறநிலையத் துறையால் 2016ஆம் ஆண்டு தற்காலிகமாக நியமிக்கப் பட்டார். இரு பிரிவினருக்கு இடையே தகராறு காரணமாக 20 ஆண்டுகாலமாக பூட்டப்பட்டுக் கிடந்த அந்தக் கோயிலுக்கு சிவசங்கரன் அர்ச்சகராகப்பட்ட வுடன் உள்ளூர் பெரியவர்கள் நண்பர்கள் உதவியுடன் நன்கொடை திரட்டி கோயிலைப் புதுப்பித்து வழிபாடுகளையும் நடத்தி வந்தார். திருச்சி அருகே உள்ள காயாமாணிக்கம் அவரது சொந்த கிராமம். 94 வயதுடைய அர்ச்சகர் தந்தை மரணத்துக்கு புத்தூர் பக்தர்கள் வந்தபோது சிவசங்கரன் ‘தலித்’ என்பதை அறிந்தனர். அதற்குப் பிறகு உள்ளூர் ஜாதி சமூகம் அவமானப் படுத்தி புறக்கணிக்கத் தொடங்கி விட்டது. பூட்டிக் கிடந்த கோயிலை தனது சொந்த முயற்சி யால் சீர்திருத்தி புதுப்பித்ததைப் பற்றியெல்லாம் கவலைப்படாமல் ‘ஜாதி’ வெறி - இவரைப் புறக்கணிப்பது குறித்து உள்ளம் குமுறுகிறார் சிவசங்கரன்.

“காலங்காலமாக திணிக்கப் பட்ட ஜாதியப் பாகுபாடுகளுக்கு முற்றுப் புள்ளி வைக்க வேண்டும் என்ற நோக்கத்தோடு இறைப் பணியாற்ற வந்தேன். தற்காலிக மாகமாவது ஒரு அரசுப் பணி கிடைத்த மகிழ்ச்சியில் இருந் தேன். இப்போது காலம்கால மாகப் பின்பற்றப்பட்டு வரும் ஜாதிய சிந்தனையிலிருந்து விடுபட மறுக்கிறவர்கள் என்னை ஒதுக்குகிறார்கள்” என்று ‘டைம்ஸ் ஆப் இந்தியா’ நாளேடுக்கு (ஆக. 4, 2018) அளித்தப் பேட்டியில் கூறி யுள்ளார். தமிழ்நாட்டில் கிராமங் கள் இன்றும் ஜாதி வெறியர் களின் கோரப் பிடிகளில் சிக்கி யிருப்பதற்கு இந்த சம்பவங்கள் சான்றுகளாக நிற்கின்றன.

ஜாதியைக் காப்பாற்றிக் கொண்டே தமிழர் பெருமையை எத்தனை காலத்துக்குப் பேசிக் கொண்டிருக்கப் போகிறோம்?

## சென்னையில் ‘நிமிர்வோம்’ வாசகர் வட்டத்தில் தோழர்கள் ஆய்வுரை

திராவிடர் விடுதலைக் கழகத்தின் சென்னை மாவட்டம் சார்பாக ‘நிமிர்வோம்’ வாசகர் வட்டத்தின் ஆறாவது சந்திப்பு, 30.07.2018 அன்று மாலை 6 மணிக்கு தலைமை அலுவலகத்தில் நடைபெற்றது. பெரியார் யுவராஜ் நிகழ்வை ஒருங்கிணைத்தார். அதைத் தொடர்ந்து ‘பெண்ணியம்’ என்ற தலைப்பில் இமானுவேல் துரை, ‘யோகக் கலை’ என்ற தலைப்பில் எட்வின் பிரபாகரன் மற்றும் ‘திராவிடர் இயக்க சாதனைகள்’ குறித்து ஜெயபிரகாஷ் ஆகியோர் விரிவாகப் பேசினர். ‘நிமிர்வோம்’ டிசம்பர் 2017 மற்றும் சனவரி 2018 மாத இதழ்களை குறித்தும் தங்களது கருத்துகளையும் எடுத்துரைத்தனர். தொடர்ச்சியாக இந்த நிகழ்வுக்கு சிறப்புரையாற்ற வந்திருந்த கழகப் பொதுச் செயலாளர் விடுதலை இராசேந்திரன் “கலைஞரின் 50 ஆண்டு கால வரலாறு” குறித்து தனது ஆழமான கருத்துகளை எடுத்துரைத்து சிறப்புரையாற்றினார்.

# நாடு முழுதும் கட்சியின் நிர்வாகிகள் குறித்த ஆய்வில் வெளியான தகவல்

# பார்ப்பன–பனியாக்களின் கூடாரம் பாஜக!

*பா.ஜ.க. தொடங்கி 38 ஆண்டுகளுக்குப் பிறகும் அக்கட்சியின் தேசிய மாவட்ட நிர்வாகிகள் பார்ப்பன–பனியா உள்ளிட்ட உயர்ஜாதிப் பிரிவினர்களிடமே இருக்கிறது என்பதை ஆய்வுகள் வெளிப்படுத்துகின்றன.*

பாரதிய ஜனதா கட்சியின் தலைவர் அமித்சாவும், இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியும் பாஜகவின் ஆட்சி அதிகாரத்தை நாடு முழுவதும் பரவச் செய்வதற்கான முயற்சியில் மிகத் தீவிரமாக ஈடுபட்டு வருகிறார்கள். இதற்காக சமூகத்தின் அடித்தட்டு மக்களின் வாக்குகளைக் கைப்பற்றுவதற்கான முயற்சிகளையும் இவர்கள் பின்பற்றுகிறார்கள்.

ஆனால் அந்தக் கட்சியின் கட்டமைப்பில் அடித்தட்டு மக்களுக்கான பிரதிநிதித்துவம் என்பது மிக மிகக் குறைவாகவே உள்ளது. பாஜக உருவாகி 38 ஆண்டுகளைக் கடந்துள்ள நிலையிலும் அக்கட்சி பொறுப்பில் இன்றளவிலும் முன்னேறிய சமூகத்தினரின் ஆதிக்கமே நிறைந்துள்ளது. குறைந்த அளவில்தான் பிற்படுத்தப்பட்ட சமூகத்தினர் பாஜகவின் பொறுப்புகளை வகித்து வருகின்றனர். பிற்படுத்தப்பட்டவர்களைக் காட்டிலும் மிகக் குறைவான அளவில்தான் தாழ்த்தப்பட்டவர்களும், பழங்குடியினரும், சிறுபான்மையினரும் பொறுப்பில் உள்ளனர்.

பாரதிய ஜனதா கட்சியின் நிறுவன கட்டமைப்பு குறித்த ஒரு விரிவான ஆய்வை நடத்தி மிகத் துணிச்சலாக இந்த உண்மைகளை வெளிக் கொண்டு வந்திருக்கிறது ‘தி பிரிண்ட்’. பாரதிய ஜனதா கட்சியின் 1000 தலைவர்களை உள்ளடக்கிய ஒரு விரிவான ஆய்வறிக்கையை ‘தி பிரிண்ட்’ ஊடகம் வெளியிட்டுள்ளது. இந்த ஆய்வு முன்வைக்கும் முக்கிய விவரங்களை நாம் தமிழில் காணலாம்.

பாரதிய ஜனதா கட்சியின் தேசிய அளவிலான பொறுப்பு வகிக்கிற நான்கில் மூவர் உயர் ஜாதியினராகத்தான் உள்ளனர். 60 விழுக்காடு தேசிய நிர்வாகிகள் பொதுப் பிரிவை சேர்ந்தவர்கள்தான். மாநிலத் தலைவர்களிலும் 65 விழுக்காட்டினர் பொதுப் பிரிவினர்தான். மாவட்ட அளவிலான தலைவர்களைப் பார்த்தாலும் 65 விழுக்காட்டினர் பொதுப் பிரிவினராகத்தான் உள்ளனர். பொதுவாகவே பாரதிய ஜனதா கட்சியின் மீது பார்ப்பன-பனியா கட்சி என்ற விமர்சனம் இருந்துவருகிறது. இதை மாற்றத்தான் கடந்த சில ஆண்டுகளாக தாழ்த்தப்பட்டவர்களை அதிகளவில் உள்ளிழுக்கும் முயற்சியிலும் பாஜக ஈடுபட்டு வருகிறது. ஆனாலும், கட்சியின் பொறுப்பு நிலைகள் அதற்கு முற்றிலும் நேர்மாறாகவே இருக்கிறது.

இந்தியாவில் மொத்தம் 752 மாவட்டங்கள் இருக்கின்றன. இதில் பாஜகவின் 487 (65.2 %) மாவட்ட நிர்வாகிகள் பொதுப்பிரிவைச் சேர்ந்த பார்ப்பன-பனியாக்கள் உள்ளிட்ட முன்னேறிய வகுப்பினர் .185 பேர் (24.7%) இதர பிற்படுத்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட மற்றும் மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்புகளை சார்ந்தவர்கள். 33 (4.4 %) பேர்தான் பழங்குடியினர். வெறும் 28 (3.7%) பேர்தான் தாழ்த்தப்பட்டவர்கள். சிறுபான்மையின மதங்களைச் சேர்ந்தவர்கள் 13 (1.7%) பேர் மட்டுமே.

பாஜகவின் தேசிய அலுவலக பொறுப்பாளர்களாக தாழ்த்தபட்ட, பழங்குடியின மற்றும் சிறுபான்மையின பிரிவுகளைச் சேர்ந்தவர்கள் 2 பேர் மட்டுமே உள்ளனர். மாநில நிர்வாகிகளாக இவர்களில் ஒருவர் கூட இல்லை.

பாஜகவின் தேசிய அலுவலக பொறுப்பாளர்கள் 50 பேர், தேசிய நிர்வாகிகள் 97 பேர், 29 மாநிலங்கள் மற்றும் 7 யூனியன் பிரதேசங்களைச் சேர்ந்த 36 மாநிலத் தலைவர்கள், 24 மாநிலங்களைச் சேர்ந்த 752 மாவட்ட பிரதிநிதிகள் என அனைவரையும் இந்த ஆய்வுக்கு பிரிண்ட் உட்படுத்தியுள்ளது. ஒவ்வொரு மாநிலத்திலும் எந்த ஜாதியினர் பெரும்பான்மையாக உள்ளார்கள் என்பதை வகைப்படுத்தித்தான் பொறுப்புகள் நிர்ணயத்தில் பாஜக செயல்பட்டுள்ளது.

முசுலிம்கள், கிறுத்துவர்கள் மற்றும் புத்த மார்க்கத்தினர் இந்நாட்டில் சிறுபான்மையினராகக் கருதப்படுகிறார்கள். இவர்களுக்கு உரிய பிரதிநிதித்துவம் அளிக்கவில்லை. சீக்கியர்கள் இந்திய அளவில் சிறுபான்மையினராக இருந்தாலும், பஞ்சாபில் அவர்கள்தான் பெரும்பான்மையினர். அதனால் பஞ்சாபில் மட்டும் சீக்கியர்களுக்கு முன்னுரிமை அளித்திருக்கிறது பாஜக. பஞ்சாபை தவிர்த்து வெளியில் பார்த்தால் தேசிய அலுவலகப் பொறுப்பிலும், தேசிய நிர்வாகியாகவும் தலா ஒரேயொரு சீக்கியர் மட்டுமே நிர்ணயிக்கப்பட்டுள்ளனர். மாவட்ட நிர்வாகியாக மத்தியப் பிரதேசத்தில் ஒருவரும், சத்தீசுகரில் ஒருவரும் நியமிக்கப்பட்டுள்ளார். வேறு எங்கும் சீக்கியர்கள் நியமிக்கப்படவில்லை.

தேசிய அளவிலான அலுவலக நிர்வாகிகளின் பெயர்கள், தேசிய நிர்வாகிகளின் பெயர்கள், தேசிய செயலாளர்கள், தேசிய துணைச் செயலாளர்கள், தேசிய பேச்சாளர்கள், தேசிய துணைத் தலைவர்கள் உள்ளிட்டோர்களின் பெயர்கள் பாஜகவின் அதிகாரப்பூர்வ இணையதள பக்கத்திலேயே கிடைக்கின்றன.

மாவட்ட பொறுப்பாளர்களின் பெயர்கள் அக்கட்சியின் மாநில அளவிலான இணையதளப் பக்கங்களில் கிடைக்கின்றன. சில மாநிலங்களில் மட்டும் பெரிய மாவட்டங்களில் ஒன்றுக்கும் மேற்பட்ட மாவட்ட நிர்வாகிகள் நியமிக்கப்பட்டுள்ளனர். ஜாதியின் அடிப்படையில் இந்தப் பொறுப்பாளர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர் என்பதை மிகத் துல்லியமாக நம்மால் அறிய முடிகிறது. சில இடங்கள் மட்டும்தான் இதற்கு முரண்படுகின்றன.

**பா.ஜ.க.வின் 50 தேசிய அளவிலான அலுவகப் பொறுப்பாளர்களில் 17 பேர் பார்ப்பனர்கள். 21 பேர் முன்னேறிய சமூகத்தினர். 4 பேர் இதர பிற்படுத்தப்பட்ட வகுப்பினர். 3 பேர் தாழ்த்தப்பட்டவர்கள். 3 பேர் பழங் குடியினர். இருவர் முசுலிம்கள், ஒருவர் சீக்கியர்.**

பாஜகவின் மிக உயர்ந்த முடிவெடுக்கும் இடங்களில் பார்ப்பனர்களையும், முன்னேறிய சமூகத்தினரையும் தாண்டி மற்ற அனைத்துப் பிரிவினர்களும் புறக்கணிக்கப்பட்டுள்ளனர் என்பதையே இது காட்டுகிறது.

இதில் 3 தாழ்த்தப்பட்டவர்களில் ஒருவர் பாஜக எஸ்.சி. அணி தலைவராவார். இரண்டு முசுலிம்களில் ஒருவர் சிறுபான்மையினர் அணி தலைவராவார். 3 பழங்குடியினர்களில் ஒருவர் எஸ்.டி பிரிவு தலைவராவார். மற்றொருவர் மத்தியப் பிரதேசத்தை சேர்ந்த ஜோதி துருவ் என்ற பெண். இவரும் பழங்குடியினர் அல்ல என அம்மாநில அரசு அவருடைய ஜாதிச் சான்றிதழை நீக்கி சர்ச்சை எழுந்தது. இதுதொடர்பான வழக்கு நீதி மன்றத்தில் உள்ளது.

ஆக, ஒட்டுமொத்தமாக தேசிய அளவிலான பாரதிய ஜனதா கட்சியின் அலுவலகப் பொறுப்பாளர்களில் 76 விழுக்காட்டினர் பார்ப்பனர்களும், முன்னேறிய சமூகத்தினரும்தான். 8 விழுக்காட்டினர் பிற்படுத்தப்பட்டவர்கள். 6 விழுக்காட்டினர் தாழ்த்தப்பட்டவர்கள்.

தேசிய நிர்வாகிகள் நியமனத்திலும் இந்த சமத்துவமின்மையானது மிகுந்தே காணப்படுகிறது. மொத்தமுள்ள 97 தேசிய நிர்வாகிகளில் 29 பேர் பார்ப்பனர்கள். 37 பேர் முன்னேறிய சமூகத்தினர்கள். 18 பேர் இதர பிற்படுத்தப்பட்டவர்கள் மற்றும் பிற்படுத்தப்பட்டவர்கள். 7 பேர் தாழ்த்தப்பட்டவர்கள். 3 பேர் சிறுபான்மையினர். ஒருவர் சீக்கியர். ஒருவர் பழங்குடியினர். மற்றொரு தேசிய நிர்வாகியும், முன்னாள் மாநிலங்களவை உறுப்பினருமான சந்தன் மித்ரா கடந்த மாதத்தில் பாஜகவிலிருந்து வெளியேறிவிட்டார். இந்தப் பதவிக்கு இன்னும் புதிதாக யாரும் நியமனம் செய்யப்படாமல் உள்ளது.

ஆக தேசிய நிர்வாகிகளிலும் 69 விழுக்காடு பார்ப்பனர்களும், முன்னேறிய சமூகத்தினர்களும் தான் உள்ளனர். எஞ்சியவர்கள் 31 விழுக்காடு உள்ளனர்.

பாரதிய ஜனதா கட்சியின் மாநில அளவிலான தலைவர்களில் ஒருவர்கூட தாழ்த்தப்பட்டவர் கிடையாது. 7 பேர் பார்ப்பனர்கள். 17 பேர் முன்னேறிய சமூகத்தினர்கள். 6 பேர் பழங்குடியினர். 5 பேர் பிற்படுத்தப்பட்டவர்கள். ஒருவர் முசுலிம். ஆக, இதிலும் 66 விழுக்காட்டுக்கும் அதிகமாக பார்ப்பனர்களும், முன்னேறிய சமூகத்தினர்களும் தான் உள்ளனர்.

**பாரதிய ஜனதாவின் மாவட்ட அளவிலான பொறுப்புகளில் பார்த்தால் முன்னேறிய ஜாதி இந்துக்களின் ஆதிக்கம் அதிகமாகக் காணப்படுகிறது.**

மொத்தமுள்ள 752 மாவட்டங்களில் 746 மாவட்டங்களுக்கான பொறுப்பாளர்களின் தகவல்தான் கிடைத்துள்ளது. இதில் மூன்று இடங்கள் காலியாக உள்ளன. மூன்று மாவட்டங்களின் பொறுப்பாளர்கள் ஜாதி குறித்த தகவல் உறுதியாகக் கிடைக்கவில்லை.

**எஞ்சியவர்களில் 487 பேர் முன்னேறிய சமூகத்தினர். இதில் நான்கில் ஒரு பங்கு பார்ப்பனர்கள்.**

25 பேர் இதர பிற்படுத்தப்பட்டவர்கள், பிற்படுத்தப்பட்டவர்கள் மற்றும் மிகவும் பிற்படுத்தப்பட்டவர்கள். 4 விழுக்காட்டுக்கும் குறைவாகத்தான் தாழ்த்தப்பட்டவர்கள் இருக்கிறார்கள். 2 விழுக்காட்டுக்கும் குறைவாகத்தான் சிறுபான்மையினர்கள் இருக்கிறார்கள். ஆக, மாவட்ட அளவிலான பொறுப்புகளிலும் பார்ப்பனர்களும், முன்னேறிய சமூகத்தினர்தான் 65 விழுக்காடு பொறுப்புகளில் உள்ளனர்.

எந்த சமூகத்திற்கும் அவர்களின் மக்கள் தொகைக்கு ஏற்ற பிரதிநிதித்துவம் பாஜகவில் இல்லை என்பதைத்தான் இது பிரதிபலிக்கிறது. 2011 மக்கள் தொகைக் கணக்கெடுப்பின்படி இந்த நாட்டின் மொத்த மக்கள்தொகையில் 16.6 விழுக்காடு தாழ்த்தப்பட்டவர்கள். 8.6 விழுக்காடு பழங்குடியினர்கள். மற்ற ஜாதிகளுக்கான துல்லியமான கணக்கெடுப்புகள் இதுவரையில் வெளியாகவில்லை. இருப்பினும் 2007 தேசிய மாதிரி ஆய்வறிக்கையின் படி இதர பிற்படுத்தப்பட்டவர்களின் எண்ணிக்கை 41 விழுக்காடாகும்.

2017ஆம் ஆண்டு உத்தரப் பிரதேசத்தில் மிகப் பெரிய ஜாதிக் கூட்டணியை வைத்துதான் அங்கு ஆட்சியை கைப்பற்றியிருக்கிறது பாஜக. அம் மாநிலத்தில் மொத்தம் 71 மாவட்டங்கள் உள்ளன. ஆனால் சில மாவட்டங்களைப் பிரித்து 92 மாவட்டத் தலைவர்களை பாஜக நியமித்துள்ளது. இதில் 72 விழுக்காடு மாவட்டத் தலைவர்கள் முன்னேறிய சமூகத்தினர்களே. குறிப்பிட்டு சொல்ல வேண்டுமானால் 30 பேர் பார்ப்பனர்கள். 15 பேர் பனியாக்கள். 26 பேர் மற்ற முன்னேறிய சமூகத்தைச் சார்ந்தவர்கள். ஆனால் அம்மாநிலத்தின் மொத்த மக்கள் தொகையில் 21 விழுக்காடாக உள்ள தாழ்த்தப்பட்டவர்களில் இருவர் மட்டுமே மாவட்டத் தலைவர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர். 26 விழுக்காடு இடங்களில் இதர பிற்படுத்தப்பட்டவர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

2019 மக்களவைத் தேர்தலை கணக்கில்கொண்டு மேலும் சில மாநிலங்களிலும் இதுபோன்ற நடைமுறையைத் தீவிரமாக பாஜக பின்பற்றியுள்ளது. பீகாரில் நியமிக்கப்பட்டுள்ள 40 மாவட்டத் தலைவர்களில் 6 பேர் பார்ப்பனர்கள். 16 பேர் முன்னேறிய சமூகத்தினர். 11 பேர் இதர பிற்படுத்தப்பட்டவர்கள். 6 பேர் பொருளாதார ரீதியாக பிற்படுத்தப்பட்ட பிரிவினர் (இ.பி.சி). அதாவது 55 விழுக்காடு பார்ப்பனர்களும், முன்னேறிய சமூகத்தினரும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

மத்தியப் பிரதேசத்தில் பார்ப்பனர்கள், பனியாக்கள் மற்றும் மற்ற முன்னேறிய சமூகத்தினர்கள் 70 விழுக்காடு அளவுக்கு மாவட்ட தலைவர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர். இதர பிற்படுத்தப்பட்டவர்கள் 25 விழுக்காடும், 4 விழுக்காடு பழங்குடியினர்களும் நியமிக்கப்பட்டுள்ளனர். ஒரு சீக்கியர் நியமிக்கப்பட்டுள்ளார். ராஜஸ்தானில் 71 விழுக்காடு மாவட்டத் தலைவர்களாக பார்ப்பனர்களும், பனியாக்களும், மற்ற முன்னேறிய சமூகத்தினரும்தான் உள்ளனர். 23 விழுக்காடு இதர பிற்படுத்தப்பட்டவர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். இருவர் மட்டுமே தாழ்த்தப்பட்டவர்கள்.

சத்தீசுகரில் 45 விழுக்காடு இதர பிற்படுத்தப்

(4ஆம் பக்கம்)

DATE OF PUBLICATION - EVERY THURSDAY TAMIL WEEKLY REG.NO.TN/CC(S)DN/459/16-18 LICENCED TO POST WPP NO.TN/PMG(CCR)/WPP-462/2016-2018
PURATCHI PERIYAR MUZHAKKAM REGISTERED WITH THE REGISTRAR OF NEWSPAPER FOR INDIA UNDER NO.TNTAM/2002/07776

# பரப்புரைப் பயணத்துக்கு கழகத் தோழர்கள் தயாராகிறார்கள்

திராவிடர் விடுதலைக் கழகத்தின் தலைமை அலுவலகத்தில் கடந்த 03.08.2018 அன்று மாலை 6 மணிக்கு சென்னை மாவட்டக் கலந்துரையாடல் கூட்டம் கழகப் பொதுச் செயலாளர் விடுதலை இராசேந்திரன் தலைமையில் நடைபெற்றது.

இதில் வரும் ஆகஸ்ட் 20 முதல் 26 வரை நடைபெறவிருக்கும் "கல்வி உரிமை பரப்புரைப் பயணத்தின்" நோக்கத்தை குறித்தும், பயணத்தை குறித்தும் விவாதிக்கப்பட்டது.

இந்த நிகழ்வை இரா. உமாபதி (தென்சென்னை மாவட்டச் செயலாளர்) ஒருங்கிணைத்தார். ந.அய்யனார் (தலைமைக் குழு உறுப்பினர்), அன்பு தனசேகர் (தலைமை செயற்குழு உறுப்பினர்) மற்றும் கழகத் தோழர்கள் தங்களுடைய கருத்துகளை கூறினர். இறுதியாக தபசி குமரன் (தலைமை நிலையச் செயலாளர்) நன்றி கூறினார்.

### மேட்டூர் பகுதியில் விளக்கக் கூட்டங்கள்

திராவிடர் விடுதலைக் கழகம் நடத்தும் தமிழர் கல்வி உரிமைப் பரப்புரை பயணம் வருகிற ஆகஸ்டு 20 முதல் 26 வரை நடைபெற இருக்கிறது.

பரப்புரை பயணத்தின் நோக்கங்களையும், கோரிக்கைகளையும் மக்களிடையே விளக்கும் விதமாக திராவிடர் விடுதலைக் கழகம் சேலம் மாவட்டம் சார்பில் பயண விளக்க தெருமுனைக் கூட்டங்கள் 4.08.2018 சனிக்கிழமை மாலை 4 மணி, சேலம் மாவட்டம் பொட்டனேரி மற்றும் 6.30 மணி மேச்சேரி ஆகிய இரு இடங்களில் நடைபெற்றது. மேட்டூர் டிகேஆர் இசைக்குழுவின் பறையிசை மற்றும் பகுத்தறிவு இசைநிகழ்ச்சி நடைபெற்றது.



இதனைத் தொடர்ந்து அ.சக்தி வேல் (தலைமைக் குழு உறுப்பினர்), பரத் ஆகியோர் பயணத்தின் நோக்கம் குறித்து மக்களிடையே விளக்க உரை நிகழ்த்தினர். நிகழ்ச்சிக்கு கோ.தமிழரசன் தலைமை வகித்து நிகழ்ச்சிக்கான ஏற்பாடுகளை செய்தார்.

(3ஆம் பக்கத் தொடர்ச்சி)

பட்டவர்களும், 41 விழுக்காடு முன்னேறிய சமூகத்தினரும் (பார்ப்பனர்கள்-3%, பனியாக்கள்-17எ, மற்ற முன்னேறிய சமூகத்தினர்கள்-21%) மாவட்ட தலைவர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர். 7 விழுக்காடு மட்டுமே தாழ்த்தப்பட்ட மற்றும் பழங்குடியின மக்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

மோடியின் சொந்த மாநிலமான குஜராத்தில் நியமிக்கப்பட்டுள்ள 41 மாவட்ட தலைவர்களில் 3 பேர் பார்ப்பனர்கள். 21 பேர் முன்னேறிய சமூகத்தினர்கள். 8 பேர் பிற்படுத்தப்பட்டவர்கள். 6 பேர் பழங்குடியினர்கள். 3 பேர் மட்டுமே தாழ்த்தப்பட்டவர்கள். அந்த மாநிலத்தின் பலமான ஜாதியாகத் திகழும் படேல் சமூகத்தினர் 31 விழுக்காடு அளவுக்கு பாஜகவின் மாவட்டத் தலைவர்களாக உள்ளனர். இவர்கள்தான் இப்போது இட ஒதுக்கீடு கேட்டு போராடிக் கொண்டிருக்கிறார்கள்.

மகாராஷ்டிராவில் பாஜக நியமித்திருக்கிற 40 மாவட்டத் தலைவர்களில் 15 பேர் அம்மாநிலத்தின் ஆதிக்க ஜாதியாக விளங்குகிற மாரத்தா வகுப்பைச் சேர்ந்தவர்கள். இவர்களும் தங்களுக்கு இட ஒதுக்கீடு வேண்டுமென்று கேட்டுக் கொண்டிருக்கிறார்கள். எஞ்சியவர்களில் 11 பேர் பார்ப்பனர்கள். 6 பேர் முன்னேறிய சமூகத்தினர்கள். 4 பேர் மட்டும்தான் இதர பிற்படுத்தப்பட்டவர்கள். பழங்குடியினர்களோ 3 பேர் மட்டுமே. ஒருவர் முசுலிம். அதிலும் மோசமாக தாழ்த்தப்பட்டவர்கள் ஒருவர் கூட இல்லை.

மேற்கு வங்கத்தில் உள்ள 37 மாவட்டங்களுக்கு நியமிக்கப்பட்டுள்ள மாவட்டத் தலைவர்களில் இருவர் மட்டுமே தாழ்த்தப்பட்டவர்கள். 5 பேர் மட்டுமே இதர பிற்படுத்தப்பட்ட சமூகங்களை சேர்ந்தவர்கள். மற்ற அனைவரும் பார்ப்பனர்கள் உள்ளிட்ட முன்னேறிய சமூகத்தினரே. பாஜக ஆட்சியில் உள்ள அசாமில் 45 விழுக்காடு மாவட்டங்களில் பார்ப்பனர்கள் உட்பட முன்னேறிய சமூகத்தினர்களே மாவட்டத் தலைவர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர். 32 விழுக்காட்டினர் பிற்படுத்தப்பட்டவர்கள் அல்லது மிகவும் பிற்படுத்தப்பட்டவர்கள். 21 விழுக்காட்டினர் பழங்குடியினர்கள். ஒருவர் மட்டும் முசுலிம்.

ஜம்மு காஷ்மீரில் 48 விழுக்காடு அளவுக்கு முசுலிம்கள் மாவட்ட தலைவர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர். எஞ்சியவர்கள் அனைவருமே பார்ப்பனர்கள் உள்ளிட்ட முன்னேறிய சமூகத்தினர்கள்தான்.

கர்நாடகாவைப் பொறுத்தவரையில் நியமிக்கப்பட்டுள்ள 36 மாவட்ட தலைவர்களில் 19 பேர் லிங்காயத்துகள். 7 பேர் ஒக்காலிகா சமூகத்தினர். இந்த இரண்டு சமூகத்தினரும்தான் கர்நாடக அரசியலில் ஆதிக்கம் செலுத்தும் முக்கியப் பிரிவினர்களாக உள்ளனர். 2 பேர் முன்னேறிய சமூகத்தினர்கள். 5 பேர் இதர பிற்படுத்தப்பட்ட சமூகத்தை சேர்ந்தவர்கள். 3 பேர் மட்டுமே தாழ்த்தப்பட்டவர்கள்.

தமிழ்நாட்டிலோ மறைமுகமாக ஆளுங்கட்சியின் கூட்டணி அரசு போலவே செயல்பட்டுக் கொண்டிருக்கிறது பாஜக. தமிழ்நாட்டில் 71 விழுக்காடு அளவுக்கு பிற்படுத்தப்பட்டவர்களும், 26 விழுக்காடு அளவுக்கு பார்ப்பனர்கள் உள்ளிட்ட முன்னேறிய சமூகத்தினரும் மாவட்டத் தலைவர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர். தாழ்த்தப்பட்டவர்களில் ஒருவர் கூட நியமிக்கப்படவில்லை.

பொறுப்பாளர்கள் நியமனத்தில் நிலவும் இதுபோன்ற பாரபட்சம் குறித்து பாஜகவின் மூத்த தலைவர்களிடம் கருத்து கேட்க பிரிண்ட் ஊடகம் முயற்சித்தபோது, யாரும் பதிலை பதிவு செய்ய அனுமதிக்கவில்லை என்று கூறியுள்ளது. ஆனால் அக்கட்சியில் இருந்து கிடைக்கும் தகவல்களின்படி, ஒவ்வொரு மாவட்டத்திலும் ஆதிக்கம் செலுத்தும் ஜாதியினரையே பாஜக தேர்ந்தெடுத்து தலைவராக நியமித்துள்ளது என்பது உறுதியாகிறது.

மேலும் இந்த பாகுபாட்டை சமநிலைப்படுத்தும் விதமாக மாவட்ட தலைவருக்கு கீழுள்ள பொறுப்புகளில் அனைத்து பிரிவினருக்கும் வாய்ப்பு அளிக்கபடுவதாகவும், இந்த முறையைத்தான் நகரங்கள் மற்றும் கிராமங்களிலும் பின்பற்றுவதாகவும் பாஜக வட்டாரத்தில் விசாரித்ததில் தகவல்கள் கிடைக்கின்றன. மற்றொரு பெயர் குறிப்பிட விரும்பாத மூத்த தலைவர் பிரிண்ட் ஊடகத்துக்கு இதுகுறித்து அளித்த பேட்டியில், "மோடி பிற்படுத்தப்பட்டவர். இதுவே பாஜக பிற்படுத்தப்பட்டவர்களுக்கான கட்சி என்பதைக் காட்டும். படிப்படியாகத்தான் மாற்றங்கள் நிகழும். ஒரு நாளில் இந்த மாற்றத்தை அளிக்க இயலாது" என்றார்.

**'தி பிரிண்ட்' ஆங்கில இதழ்**
**தமிழில் : ர. பிரகாசு**


## தற்போது விற்பனையில்

## 'நிமிர்வோம்' – ஜூலை 2018 இதழ்




- தலையங்கம்-ஒரு நாத்திகரின் 75 ஆண்டு பொது வாழ்வுப் பயணம்
- 'தலித்'துகளை புறக்கணிக்கும் கிரிக்கெட் வாரியம்
- ஆளுநர்களின் அதிகார வரம்பு மீறல்- ஒரு விரிவான அலசல்
- தமிழ் இலக்கியங்களில் மூடநம்பிக்கைகள்
- ஜாதி சங்க மாநாடுகளில் ஜாதியை எதிர்த்த பெரியார்
- மோடி ஆட்சியில் 'தலித்' அடக்குமுறைகள் - அய்.நா வில் சமர்ப்பிக்கப்பட்ட ஆவணம்

மற்றும் பெரியார் சிந்தனைகளுடன்...
தனி இதழ் விலை : ரூ.20
தொடர்புக்கு: நிர்வாகி, 95, டாக்டர் நடேசன் சாலை, அம்பேத்கர் பாலம், மயிலாப்பூர், சென்னை-600 004.
தொலைபேசி எண்: 044 24980745/7299230363
www.dvkperiyar.com/nimirvomdvk@gmail.com


Tamil Weekly
Posted at : Pathrika Channel, Egmore RMS under WPP Posted: 10th August 2018

OWNER AND PUBLISHER BY : K. RAJENDRAN, FROM 29, JOURNALISTS COLONY, THIRUVALLUVAR NAGAR, THIRUVANMIYUR, CHENNAI - 600 041.
AND PRINTED BY : S. THEESMAS, AT LILLY SOOSAI OFFSET, NEW NO.8, OLD NO.12/1, MOHAMMED USAIN LANE, ROYAPETTAH, CHENNAI - 600 014.
EDITOR ; K. RAJENDRAN